

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை 25.2.2025 அன்று, மகாராஷ்டிரா மாநிலம் தானேவில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான இறகுப் பந்துப் போட்டியில், 11 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தங்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வன். சிபிஜெரோ சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

### புதுக்கோட்டை மாவட்டம் – கந்தர்வக்கோட்டை – வெள்ளாளவிடுதியில் நிகழ்ந்த விபத்தில்

# உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை,பிப்.28-

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வ கோட்டை வட்டம், வெள்ளாளவிடுதி வருவாய் கிராமத்திலுள்ள அரசு விதைப் பண்ணையில் நிகழ்ந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத் தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளது டன் நிதியுதவி வழங்கவும் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறி விப்பு வருமாறு:

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர் வகோட்டை வட்டம், வெள்ளாளவிடுதி வருவாய் கிராமத்தில் அமைந்துள்ள அரசு விதைப் பண்ணையில், சங்கம் விடுதி வருவாய் கிராமம், குருவாண் டான் தெருவைச் சேர்ந்த திருமதி. ஜெயலலிதா (வயது 40) க/பெ.விஜய குமார் என்பவர் கடந்த 21.2.2025 அன்று வேலை பார்த்துக் கொண்டி ருக்கும் போது எதிர்பாராதவிதமாக உளுந்து அடிக்கும் இயந்திரத்தில் சேலை சுற்றி தலையின் பின்புறத்தில் காயம் ஏற்பட்டு தஞ்சாவூர் அரசு மருத் துவகல்லூரி மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்ட நிலையில் 26.2.2025 அன்று பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரி ழந்தார் என்ற துயரமான செய்தி யைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த திரு மதி.ஜெயலலிதா அவர்களின் குடும் பத்தினருக்கும் அவரது உறவினர்க ளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரி வித்துக்கொள்வதோடு, அவரது குடும் பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தர விட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# ஈடு இணையிலா எங்கள் முதல்வர்
# நாடு போற்றிட நலமுடன் வாழ்க!

இந்திய முதல்வர்கள் வரிசையில்
எங்கள் முதல்வரே முதல்வர்
சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்தால் – இந்தச்
சிறப்பின் உண்மை விளங்கும்!

கல்வி, மருத்துவம், தொழில்துறையில்
காண்போர் வியக்கும் அளவுக்கு
எல்லாத் துறையிலும் முதலிடம் – இதுவே
எங்கள் முதல்வரின் அடையாளம்!

ஒத்துழைப்புத் தராத ஒன்றியம் – நிதி
ஒதுக்காமல் தமிழ்நாட்டை வஞ்சித்தாலும்
எத்திசையும் புகழ்மணக்கும் அளவுக்கு
ஏற்றமுடன் ஒளிர்கிறது தமிழ்நாடு...!

நாளொரு வளர்ச்சியும் மலர்ச்சியும் எங்கள்
நாயகன் ஆட்சியில் காணுகிறோம்...!
வாளொடு பிறந்த தமிழ்க்குடி – எனும்
வரலாற்றில் பெருமை பூணுகிறோம்!


கோட்டை நாற்காலியில் அமர்ந்தபடி
கோலோச்சும் முதல்வர் இவரல்ல...
நாட்டு மக்கள் களஆய்வில்
நாள்தோறும் நேரிலே சந்திப்பவர்...!

இப்படித்தான் முதல்வர் இருக்கனும்
என்பதற்கு இலக்கணம் இவரன்றோ நான்
செப்பிய இக்கவிதை வரிகளுக்கு
செம்மை இலக்கியமும் இவரன்றோ...!



வருகின்ற தேர்தலிலும் வாகைசூடி – புது
வரலாறு படைத்திட வேண்டுமென
அருந்தமிழ்க் கலைஞரின் புதல்வரை
அன்புடன் வாழ்த்தி மகிழ்கின்றோம்...

எங்கள் தளபதி ஸ்டாலினின்
ஏற்றமிகு பிறந்த நாளிலே
சிங்கமாய் சிலிர்த்து சபதமிடுவோம்!
செழிப்பான தமிழ்நாடு அமைந்திடவே!



கவிஞர் இரவிபாரதி




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தல் படி ,சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் ஆலோசனைப்படி மும்மொழி கொள்கை என்ற பெயரில் இந்தியைத் திணித்து மீண்டும் மொழிப்போருக்கு நிர்பந்திக்கும் பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்புதமிழ்நாடு(FSOTN) மற்றும் சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் கிழக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி அமைப்பாளர் முனைவர்.அ. சீனிவாசன் அப்பாதுரை தலைமையில் வாழப்பாடி பேருந்து நிலையத்திலிருந்து பேரணியாக தொடங்கி, வாழப்பாடி தபால் நிலையம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாணவர் கூட்டமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள், மாவட்ட தி.மு.க மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் வேங்கையன், அருண் பிரசாத், கிஷோர் மகேஸ்வரன் மற்றும் மாணவரணி நிர்வாகிகள், தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# சரித்திரம் படைக்கும் சாமானியனே!...

பள்ளியில் சேரச் சென்ற உனக்கு இடம் வழங்க நிர்வாகம் மறுத்ததன் காரணம் என்ன? நீ சுயமரியாதைக் குடும்பத்துக் குன்று மணி அல்லவோ!

வாய்ப்பு வழங்கிய சென்னைக் கிறித்துவக் கல்லூரிப் பள்ளி ஆசிரியர்கள் சிலரும், மேல் தட்டு மாணவர்களும் வன்மம் கொண்டு உன்னை வார்த்தைத் தீயால் சுட்டனர். நீயோ, சூரியக்குலத்தில் பிறந்த சுடரொளி என்பதால் தானே!

மாநிலக் கல்லூரி உனக்குப் பட்டம் தந்தது. அங்கேதான் உனக்கு எதிர்கால அரசியல் சட்டத்தையும் கையில் திணித்தது!

நீ ஓர் அரசியல் தலைவரின் மகன் என்று எந்த இடத்திலும் அடையாளப்படுத்திக் கொண்டதில்லை. அடக்கம், அமைதி, பணிவு இவைகளை ஆபரணங்களாக்கிக் கொண்டவன்!

மீசை முளைத்த பருவத்திலும், ஆடம்பர ஆசைகளைத் தூக்கியெறிந்து துறவரம் பூண்டவன்! உன் கால் சட்டைப் பருவத்திலேயே மேடைப் பயிற்சியில் ஒத்திகை பார்த்தவன்! நீ மாணவனாக மாறியபோதே விருட்சமாக வளர்ந்த விதை. தமிழ்மொழிக் கல்வி பற்றி அன்றே அடைமழை பெய்தவன்! பால்ய பருவத்தில் உனக்குச் சலுகைகள் கிடைக்க மறுத்தன. தமிழக சரித்திரத்தை மாற்றி எழுத முயலும் ஒரு சுயமரியாதைக் கலகக்காரரின் மகன் என்பதால் அன்றோ! உன்னால் கோபாலபுரம் ஓர் இளைஞர் அமைப்பு கண்டது. தலைவர்களின் பிறந்த நாள், பொங்கல் விழா போன்ற திருவிழாக்களைப் பெரு விழாக்களாக்கிக் காட்டிற்று. உன் விழா ஏற்பாட்டால், நீ எதிர்பார்த்திருந்த 'பேரறிஞர் அண்ணா' வருகை தவிர்க்கப்பட்டது. அவருடன் உடலில் தொடர்ந்து குடும்பம் நடத்தி வந்த புற்றுநோய், சிகிச்சைக்கு அமெரிக்க நாடு விசா வழங்கி சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்பு நடத்தியது. செய்தி கேட்ட உன் இதயத்தில் ஆயிரங்கோடி இடி இறங்கினாலும் அந்த நிகழ்ச்சி நிரலை நிறுத்தியதில்லை, ஒத்திப்போட்டதுமில்லை! திராவிட இயக்கத் தலைவர்கள் உனது நிகழ்ச்சிகளில் அடிக்கடி பங்கேற்றும் பாராட்டுப் புகழுரைகளை உன் நெஞ்சில் பதியம் போட்டனர். நடிகவேள் முதல் புரட்சி நடிகர் வரை உன் கைகளைக் குலுக்கிய வடுக்களின் அடையாளங்கள் இன்னும் கல்வெட்டுக்களாக இருக்கின்றன.

'முரசே முழங்கு' நாடகம் கண்ட எம்.ஜி.ஆர். கோகுல கண்ணனாக மாறி உன்னை வாரி அணைத்து முத்தமிட்டார்.

1968 மாநகராட்சித் தேர்தலில் ஒலிபெருக்கி நாயகனாக சைக்கிளில் ஏறி வீதி வீதியாகச் சுற்றி வாக்கு சேகரித்தவன் நீ! கழக வேட்பாளர்கள் டி.கே. கபாலி, இரா, சடகோபன், ஜேசுதாஸ் போன்றவர்களின் மார்பில் விழுந்த வெற்றி மாலையில் மணம் பரப்பும் ரோஜாவாக மலர்ந்தவன் நீ!

1976 இந்திரா காந்தி அம்மையாரால் இந்திய நாட்டின் சனநாயகத் திருவிளக்கு அணைக்கப்பட்டது. அரசியல் தலைவர்களை எல்லாம் சிறை மிருகம் பூதமாக மாறி விழுங்கிக் கொண்டிருந்தது. சர்வாதிகாரத்தை எதிர்த்த காரணத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சிக் கட்டிலையே இழந்தார் கலைஞர். அதுவரை கோபாலபுரம் வீட்டின் பாதுகாப்பு வேலியாகக் கைகட்டிச் சேகவம் புரிந்த காவல்படையானது வீட்டிற்குள் நுழைந்து கைது செய்யும் 'நாஜிப் படையாக மாறியது. மதுராந்தகத்தில் ஒரு நாடக விழா நடத்த முகாமிட்டிருந்தபோது உனக்கு ஆட்சிக் கலைப்புத் துயரச் செய்தி தகவல் ஒன்று தரப்பட்டது. வீட்டிற்கு வந்தபோது உன் தந்தையே முன்வந்து உன்னைச் சனநாயக போருக்குச் செல்லக் காவல்துறையின் கைகளில் பூச்செண்டாக அள்ளித் திணித்தார். தேனிலவைப் பார்க்க வேண்டிய நேரத்தில் சிறைக்கூடத்தைப் பார்த்தவன் நீ! சர்வாதிகார நெருப்புக் குழியில் பூ மிதித்து அரசியல் அமுதம் குடிக்கக் கற்றுக் கொண்டாய்! நீயோ மிசா கைதி. மண வாழ்க்கையில் பங்கெடுத்த உன் துணைவியார் 'தூர்காவதி'யோ ஐந்து மாதங்களிலேயே சூரிய வானத்தைப் பிரிந்த நிலவு ஆனார்! அவரின் தியாகமே நீ அரசியலில் அடியெடுத்து வைக்கத் துணைபுரிந்த பூ பாளம்! பின்னாட்களில் அவரே வீட்டின் நிருவாகத் தலைவி! குழந்தைகட்கு வகுப்பெடுத்த நல்லதொரு பல்கலைக் கழகம்! சிறைக் கொட்டடிக்குள் சிட்டிபாபு தான் உனக்குத் தாயின் மடியானான். உணவு தரும் சஞ்சீவி மூலிகைச் செடியானான். சிறை அதிகாரிகள் எனும் கழுகுக் கொத்தலிலிருந்து தனது சிறகுகளை மூடி குஞ்சுகளைப் பாதுகாக்கும் தாய் பறவையாகிச் செத்த பிணமானான்! நெருக்கடி காலம் இந்தியாவில் நுழைவுத் தேர்வு நடத்தியபோது நீ அரசியல்வாதியாய் அல்லவா தேர்ச்சி பெற்றாய்! கலைஞர் சொல்லியது போல் அரசியல் என்பது தென்றல் வீசும் குளிர்தரு அல்ல, அது அமிலம் கலக்கிய கொதிகலன்! தி.மு.க. ஓர் உயிர் நதி. சிற்றாறுகளும், சில்லோடைகளும் கலந்த மாபெரும் கடல்!



கவிஞர் தமிழ்தாசன்
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்

1980 சூலை 20ல் மதுரை ஜான்சிராணி பூங்காவில் இளைஞர் அணி எனும் பூஞ்செடியைக் கலைஞர் நட்டுத் தொடங்கி வைத்தார். அப்போதே அரசியல் எதிரிகள் முனை முறிந்த ஊசியாக மடங்கிப்போயினர்! அந்த முத்திரை உனக்குச் சித்திரை நிலவாகி வெளிச்சம் தந்தது. பல இளைய நட்சத்திரங்கள் உன்னுடன் கைகோத்தன! சிறைவிட்டுவந்த நீ கொள்கை முழக்கங்களின் முகவரி எழுதத் தொடங்கினாய்! 15 வயதினிலேயே மாம்பலம் கோடம்பாக்கம் மேடைதான் முதன் முதலில் உனக்கு அரசியல் கூட்டத்திற்கு அரங்கேற்றம் நடத்திற்று! அதுமுதல் உனது கழுத்து, கறுப்பு சிவப்புத் துண்டுகளால் சுகவலி ஏற்படுத்துவதை ஏற்று அடிக்கடி குனியப் பழகிக் கொண்டது. 'வெற்றி நமதே' நாடகத்தில் நடிகன் ஆனாய். 'ஒரே இரத்தம்', 'மக்கள் ஆணையிட்டால்' ஆகிய திரைப்படங்களில் காட்சியளித்தாய். 'குறிஞ்சி மலர்', 'சூர்யா' ஆகிய சின்னத் திரை தொடர் நாடகங்கள் மூலம் மக்கள் இதய சிம்மாசனத்தில் நிரந்தர இருக்கை போட்டவன்தானே நீ! உன் மூத்தோன் மு.க. முத்துவின் திரைப்பட நுழைவு சிறுவன் பருவத்திலேயே, உன்னிடத்தில் 'கலைத் தாகம்' எனும் மனுத் தாக்கல் செய்திருந்தது! நீ இளைஞர் அணி அமைப்பின் பொறுப்பை ஏற்றபோது எம்.ஜி.ஆர். ஆட்சியின் கோட்டையில் அடிக்கல் நகரத் தொடங்கியது. என்னை ஆட்ட முடியாது, அசைக்கமுடியாது என்ற மமதை இராணி ஜெயலலிதாக்களின் அடிவேர் ஆட்டங்கண்டது. மணிமகுடமும் மண்ணில் உருளத் தொடங்கிற்று. எங்களின் எழுச்சி ஞாயிறே! இதய ரோஜாவே! திருக்குவளைச் சித்தர் கலைஞர் வழங்கிய கழகத்தின் காயகல்பமே! சென்னை மாநகர மணமகள் உன்னை உள்ளாட்சி மணவறையில் உட்கார வைத்து மேயர் மணமகனாக்கி மாலை சூட்டியது! நீ ரிப்பன் மாளிகையில் நுழைந்ததுமே கையூட்டுகளும், முறைகேடுகளும் கல்லறைக்குள் படுத்துக் கொண்டன. மாநகர வீதிகள் நாள்தோறும் உன் இராஜ வருகைக்காக மாலைகளோடும் ஆரத்தித் தட்டுகளோடும் காத்துக் கிடந்தன! புயல், மழை, வெயில் என்று நீ விடுமுறை எடுத்தவனில்லை. அந்த காயப்பட்ட துன்ப நாட்களில்கூட உனது அரசாட்சியின் அலுவலகங்கள் மக்களைத் தேடியே ஓடிக் கொண்டிருந்தன. நீ மனுநீதியின் மூலம் மக்களின் தேவையை அன்றாடம் மனதாரக் காதலித்தாய்!

குண்டும் குழியுமான வீதியின் உடல் நோயுற்றிருக்கும் போதெல்லாம், நீ செப்பனிடும் மருத்துவன் ஆனாய்! உன் பூ விரல்கள் விளக்கு எற்றியபோது, இருட்டுக்காந்தாரி இறந்துகிடந்தாள்!

முடக்கு நோயுற்ற குடிநீர்க் குழாய்களுக்குச் சிகிச்சையளித்துக் குழாய் நரம்புகளில் தண்ணீர் வலிமை தந்தவன் நீ! உன் இதயத் துடிப்பில் தான் மாநகராட்சி மருத்துவமனைகள் மக்கள் சேவை செய்யத் தொடங்கின!

உன் வருகைக்குப் பின்தான் வெற்றிடமாகக் கிடந்த கல்விக் கூடங்களில் மாணவர் கூட்டங்கள் பெருகி வழிந்தன. மாநில அளவில் போட்டித் தேர்வுகளில் மதிப்பெண் பெற்று உயர்ந்து நின்றன!

சரிசெய்யப்பட்ட சாலை மருங்குகளில் மழை வருகைக்காக மரங்கள் முளைத்து தலையாட்டி நின்றன! குடிசைகளின் குரல் கேட்டுக் குறைகள் களைந்த ரிப்பன் மாளிகையில் தப்பாத வேலைக்காரன் ஆனாய் நீ!

சூரியன் மேற்கில் சுருண்டு படுத்தவேளையிலும், நீ நகர்வலம் வந்த நடுநிசி நாயகன் அல்லவா?

உன் வெள்ளை மாளிகைச் சேவையைக் கண்டு வெளிநாடுகள் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கின. உலக நாடுகள் உன்னை உலா வரச்செய்து விருதுகள் வழங்கிக் கை குலுக்கின.

மாநில மாணவர்களுக்காக நீ சட்டமன்றத்தில் சங்க நாதம் செய்தாய், பேருந்துகளில் கட்டணமின்மையைக் கடமையாக்கினாய்!

இளைஞர்களின் ஊட்டச்சத்தே! வாலிப மின்னல்களை புது நடையால் கைது செய்து சாணை பிடிப்பில் சரிதம் படைப்பவனே! கழகக் கொள்கை முழக்கம் தொடர முரசொலிக்காகச் சத்துணவு புகட்ட நாடு சுற்றி வந்து ஊட்டி வளர்க்கிறாய்! கலைஞர் பெற்ற முரசொலிக் குழந்தையைக் கிளைக் கழகக் கைகளில் தவழ விடுகிறாய்! உன் பொன்னுடலையும், துணைவியாரின் உடலையும் தானஞ் செய்து உலக நிலையாமையை அறிவுறுத்தி அடையாளங் காட்டினாய் நீ! மழையின் பொழிவை மேடைப்பேச்சால் அவ்வப்போது நினைவு படுத்துபவனே! கோட்டை 'ஆக்டோபஸ்'கள் அந்நாளில் உன்னை அழிக்க நினைத்தன. நீயோ, மின்சார 'ரோபட்டாய்' சஞ்சாரஞ் செய்தாய்! காவல் துறையின் பொய் வழக்குகளைச் சிறைச் சாலைகளின் சித்ரவதைகளை வடுக்களாக்கி வழிப்பயணம் தொடர்பவன் நீ! புயலின் வேகத்தைச் சுற்றுப் பயணத்தால் புறந்தள்ளுபவனே!, கலைஞரின் ஆணையைக் கடமையாக்கும் சூரியக்கீற்று நீ! பெரியார், அண்ணா, கலைஞர் சுவடுகளைச் சுவடிகளாக்கிக் கொண்டவன்! உன் முன் அரசியல் சூறாவளிகள் தோற்றுப் போயின. ஆனால் நீயோ ஆடிச் சிரிக்கும் 'நாணல்' புல்லாகவே என்றும் நிமிர்ந்து நிற்கின்றாய்!

அதிசயப் புதுமைகள் பூத்துக்குலுங்கும் சாகாவரம் பெற்ற உன் அரசியல் பயணத்தில் என்றும் முதுமை கண்டதில்லை.

பட்டி, தொட்டிகளெங்கும் இரு வண்ணக்கொடிகள் பறக்க உன் வருகையைக் கண்டு கிளைக் கழகங்கள் பூரிப்படைகின்றன. உனது வாஞ்சைமிகு கரங்களோ வாரி அணைப்பதில் சுகம் காண்கின்றன. ஆம், நீ கிளை நதிகளைத் தேடிச் செல்லும் கடலாக இருக்கிறாய், வறட்சி நேரத்தில் பூமிப் பந்தில் விழும் மழைத்துளியாகவே இருக்கிறாய்.

உன்னைப் பின் தொடர்ந்தவர்கள் பலர் மாண்புமிகுகள் ஆயினர், பொறுப்புகள் பல பெற்றனர், ஆனால் நீயோ பயணிகளை இறக்கிவிட்ட படகைப்போல் கடலிலே அமைதியாகவே நின்றாய். காரணம், நீ கலைஞரின் மகன் என்பதால், உனக்கு நீயே வேலி அமைத்துக் கொண்டாய். விலங்குகள் மாட்டிக் கொண்டாய்!



காலங்கள் மாறின, காட்சிகள் மாறின. உனது தேவையைத் தமிழகம் உணர்த்திற்று. அதனாலே தேர்தல் வெற்றி மாலைகள் உன் கழுத்தில் அடிக்கடி விழுந்தன!

உள்ளாட்சியில் நல்லாட்சி தந்த அமுத சுரபி! நீ துணை முதல்வர் பொறுப்பேற்றதும் நலிந்த மக்களின் இல்லங்களிலும் உள்ளங்களிலும் கலைஞரின் பொற்காலச் சாதனைகளை நினைவுப்படுத்தினாயே! வில்லின் கணையாக மாறி மக்களின் தேவையை அறுவடை செய்தாய் நீ!

கலைஞர் தந்த பயிற்சியால் கோட்டையைக் குடிசைவாசிகளின் கோடை வாசஸ்தலமாக்கினாய்!

உன் மணிக்கால்கள் வலியெடுக்க, மலர் கைகள் கடுகடுக்க, மணிக் கணக்கில் நின்று மகளிர் சுய உதவிக் குழுகட்குச் சுழல்நிதி வழங்கியவன் நீ!

நீண்ட நாள்களாய் தேர்தல் மணமகனைக் காணாத பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டகச்சியேந்தல்கள் உன் பொறுப்புக்குப் பின்தான் ஆதிக்கச் சக்திகளின் இடுப்பெலும்பை முறித்து மணக்கோலம் கண்டன. மலர் மாலைகள் சூடின!

அன்றும் இன்றும் கடல்நீர் குடிநீராக்கும் திட்டம், ஒருங்கிணைந்த கூட்டுக் குடிநீர்த் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்கள், மகாத்மா காந்தி ஊரக வளர்ச்சி வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், மெட்ரோ ரயில், கிராமப்புற மேம்பாடு, நகர உள்கட்டமைப்பு, பாதாளச் சாக்கடை, சாலைகள் என பல்வேறு வடிவங்களில் எழுச்சி பெற்றன!

தமிழகம் தொழில்துறையில் பூத்துக் குலுங்கிச் சிரிக்கிறது. முதலீட்டின் வேகம் பந்தையக் குதிரைகளைத் தோற்கடிக்கின்றது. அதனால் கனரகத் தொழில்கள் பல இலட்ச இளைஞர்களை வேலை வாய்ப்பை வழங்கி, வீடு தேடித் தூக்கிச் சென்றுள்ளது!

நீ ஓய்வறியாப் போராளி, பட்டிதொட்டிகளெல்லாம் வானம்பாடியைப்போல் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தொடுவானத்தையே அறிவாலயக் கட்டடத்தில் செதுக்கி வைப்பவன்! சிலர் காகிதப் புலி மீது சவாரி செய்து கொண்டிருக்கும்போது, நீயோ உழைப்பின் மீது மட்டும் நம்பிக்கை வைத்து நெற்றிவேர்வையில் முத்து வழிப்பவன்! கடமையும், பொறுப்பும் உன்னிடத்தில் சூரிய சந்திரர்களாகக் கொள்கை வலிமை பெறுகின்றன! அது எதிர்க்கட்சி வரிசையில் புதுப்புனல் அருவியாகவும், ஆளுங்கட்சி வரிசையில் ஆழ்கடல் முத்தாகவும் உனது சட்டமன்றப் பணிகளோ நினைவுபடுத்துகின்றன! உனது நமக்கு நாமே சுற்றுப் பயணத் திட்டம் தமிழக மக்களின் கைகளில் ஓர் வரலாற்றுக் கருவூலத்தைத் தந்து சென்றிருக்கிறது. ஆள்பவனாக இருக்கும்போது அள்ள அள்ளக் குறையாத மணிமேகலைக் கையில் தவழும் 'அமுதசுரபி'! ஓர் இயக்கத்துக்கோ, அல்லது நிறுவனத்துக்கோ தலைமைப் பண்புகள் மிகவும் தேவை என்பதை நிரூபித்துக்கொண்டிருக்கிறாய்! மென்மையான, அதேசமயம் அழுத்தமான பதிவுகளைக் கொண்டதுதான் தலைமைப் பண்பு. அதை இந்திய வரலாற்றில் நிலைநாட்டும் அரசியல் நெப்போலியன்தான் நீ! யாரும், யாருக்கும் தலைமைப் பண்பை ஊட்டிவிடுவதில்லை. மாறாக, வளர்வதற்கும், வளர்த்துக் கொள்வதற்கும் உதவுவதே தலைமைப் பொறுப்பு என்பதனை உண்மையாக்கும் நிலைக் கண்ணாடி நீ!தலைமைக்கு நம்பகத் தன்மையே அடித்தளம். தலைவர்கள் தொலை நோக்குப் பார்வை உடையவர்கள். நீண்ட கால அடிப்படையில் இலக்குகளை நிர்ணயித்து வெற்றியை முன்னமே உணர்பவர்கள் என்பதனை வரலாற்றில் எழுதிக் கொண்டிருப்பவனே!

நம்பகத் தன்மையே தலைமை' அல்லது 'தலைமைக்குத் தேவை நம்பகத்தன்மையே என்பது முடிவு செய்யப்படுகிறது.

நேர்மையை வளர்த்தல், எதிர்பார்ப்புகளை வளர்த்தல், உத்வேகம் அளித்தல், தகுதிகளையும், திறமைகளையும் வளர்த்துக்கொள்ளுதல் என்பன போன்ற தலைமைப் பண்புக்கு மகுடம் சூட்டியவன் நீ! அதில் தலையாயக் காரணிகளாக விளங்குபவனும் நீ!

எங்கள் சாமானிய மக்களுக்கான கழகப் படையின் தளபதியே! இயல்பாகவே உமது வாழ்க்கை நெறிமுறைகளில் தலைமைப் பண்புகளை வளர்த்துக் கொண்டவன் நீ!

தப்பு தவறு என வரிசையிட்டு மாற்றுக் கட்சிகள் ஊடகங்கள் எழுப்பும் விமர்சனங்கள் அடுக்கி வந்த போதும், அதனைப் புறந்தள்ளிவிடாமல், உண்மைக்கு உரிய மரியாதை தந்து, மனதார ஏற்று திருத்திக் கொள்ளும் மனப்பக்குவம் பெற்ற மனுநீதிச் சோழன் நீ!

உள்ளாட்சி மன்றம், சட்டமன்றம், நாடாளுமன்றம் ஆகியவை தேர்தல் களத்தில் உனது வெற்றிக்கொடி பட்டொளி வீசி பறக்கிறது! 'சொல்வதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம். எனப் புதிய முற்போக்குத் திட்டங்களுக்கு முகவரி காட்டுபவனே! சொல்லினும், செயலிலும் கர்ணனாக அவதாரம் எடுப்பவனே! மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் என இலவசப் பயணம் செய்ய பேருந்துகளை ஓடவிட்டவன் நீ! உயர்கல்வித்துறையில் பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் தந்து சிரபுஞ்சியாய் பொழிபவன் நீ! இல்லந்தேடி கல்வித்திட்டம், மக்களைத்தேடி மருத்துவத்திட்டம், காலைச் சிற்றண்டித்திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம் என மக்களைத் திக்குமுக்காட வைக்கிறாய்! காலை சிற்றுண்டி திட்டத்தால் இடைநிற்றலை நிறுத்திப் பள்ளி வருகையை நிரம்பி வழிய சரிதம் எழுதியவன் நீ. உயர் சிகிச்சை பெற தமிழ்நாடு வரும் அளவுக்கு மருத்துவ தலைநகராக தமிழ்நாடு முன்னேற்றியன் நீ. 1000 முதல்வர் மருந்தங்கள் திறந்து பொதுமக்களுக்கு குறைந்த விலையில் மருந்துகள் தர நோய் தீர்ப்பவனும் நீ. நாள்தோறும் சூரியன் முகங்காட்டுகிறனோ இல்லையோ, உன் முகம் தமிழக வீதிகளில் தேர் ஏறி நகர்வலம் வருகின்றது! கடைக்கோடி மனிதர்களுக்கும், குக்கிராமங்களுக்கும் கோட்டையைக் கொண்டு சென்றவன் நீ! குளிரெடுக்கும் மனிதர்களுக்கெல்லாம் கம்பளி தந்து போற்றிவிடும் பாரி மன்னன் நீ. நாள்தோறும் உனது சாதனைத் திட்டங்களால் ஏழை, எளியவர்களின் கனவுக் களஞ்சியங்கள் நனவாகி நிரம்பி வழிகின்றன. திராவிட ஆட்சி நடத்தி வரும் திண்டோள் படைத்த திருவாரூர் தேர் அழகே!சமூகநீதி, சமத்துவநெறி எழுதும் சட்டதிட்டங்களுக்கான சரிதம் படைக்கும் சாமானியனே!

நீ எதிர் வரிசையிலிருக்கும்போது மூவேந்தர்கள் பிடித்த போர் வாள்!

கட்டாய இந்தி திணிப்புக்கு கல்லறை கட்டி நிற்பவன் நீ!

நீ கழகங்கண்ட தலைவர்!

கலைஞர் பெற்ற தலப்பதல்வர்! இயக்கத்திற்குக் கிடைத்த அறிவாலயச் சிற்பி! ஏன், அரசியல் புயலிலும், மழையிலும், வெப்பத்திலும் பயணம் செய்யக் கிடைத்த எதிர்கால தி.மு.க. இயக்கத்தை இயக்கும் மாலுமி நீ!

உன் சொல்லாடல்கள் யாரையும் காயப்படுத்துவதில்லை. கட்சிக்கும் ஆட்சிக்கும் அதிக நேரம் செலவழிக்கும் அடக்கமான தலைமைப் பண்பைப் போற்றுவதில் உனக்கு நிகர் நீயே!

"நெருக்கடி நிலை ஓராண்டுக் காலம் சிறையிலே இருந்தபோதே ஸ்டாலின் தளபதியாகிவிட்டார். செயல்வீரராகிவிட்டார், போராடுவதற்கான உணர்வு, ஆற்றல் கொண்டவராக அன்றைக்கே ஆகிவிட்டார் என்ற பேராசான் அன்பழகனாரின் வாக்கின் உயிர் நாடி நீ!

கழகத் தொண்டர், பொதுக்குழு உறுப்பினர். அரசியல் மிசாக் கைதி இளைஞர் அணி மாநிலச் செயலாளர், கழகத் துணைப் பொதுச் செயலாளர், கழகப் பொருளாளர், கழக செயல் தலைவர், தலைவர் எனக் கழகப் பொறுப்பு பரிணாமம் பெற்றவன் நீ!

சட்டமன்ற உறுப்பினர், மேயர், உள்ளாட்சித் துறை அமைச்சர், துணை முதல்வர், எதிர்கட்சித் தலைவர், ஆளுங்கட்சித் தலைவர், முதல்வர் மக்களாட்சிப் பொறுப்பும் எனச் செயல்வடிவம் பெற்ற அரசியல் 'சாரணாத் எனும் பெருந் தூண்' நீ!

பரிதியாம் கலைஞர் குலத்தோன்றலாய் விளங்கும் கழகத் தேருக்கு சாரதியும் நீ! சுறுசுறுப்பை உடைமையாக்கி நிற்கின்ற ஆட்சிக் கட்டிலில் நீயோ வாரிதி! தமிழகக் களத்தில் புதுமைக் கவிதைகள் படைத்துவரும் நீ அரசியல் பாரதி! ஆம், திராவிட இயக்கத்தின் திருவிளக்காக நீ ஒளி வீசுகிறாய். வாழ்க பல்லாண்டு!

கழகத் தலைமைப் பொறுப்பில் இரண்டாம் தலைவனாக அடி எடுத்து வைத்து அகிலத்தை அளப்பவனே!

நாற்காலிகளால் நீ பெருமை பெறுபவன் அல்ல. உன்னால் தான் நாற்காலிகள் பெருமை பெறுகின்றன.

நீர், நிலம், காற்று, வான், வெய்யோன் வாழ்ந்த வையத்து வாழ்வாங்கு வாழ்க!